# ஈழத்தில்
# சிவ வழிபாடு

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்



# அமரர். க. கணபதிப்பிள்ளை அவர்கள்

தோற்றம்
**23 - 9 - 1923**

மறைவு
**26 - 9 - 1989**

பொதுசன நூலகம்

94.55493

# ஈழத்தில் சிவ வழிபாடு

## தொன்மை

புவியியல் ரீதியில் இந்து சமுத்திரம் சூழவுள்ளதாக அதன் மத்தியில் அமைந்து விளங்கும் இலங்கை, இந்திய உப கண்டத்திற்கு மிக அண்மையிலே திகழ்வதால் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் வரலாற்றுக் காலத்திலும் அது இந்தியச் செல்வாக்குக்கு உட்பட்டு வந்துள்ளமை தவிர்க்க முடியாத தொன்றாக இருந்து வந்துள்ளது. இவ்விரு நாடுகளுக்குமிடையில் நிலவிய வர்த்தகத் தொடர்புகள் மூலம் கலாசாரத் தொடர்புகளும் ஏற்பட்டன. சமயம், தத்துவம் மற்றும் கலையம்சங்களாகிய கட்டடக்கலை, சிற்பம், இசை போன்ற பண்பாட்டின் பல்வேறு கூறுகள் இலங்கைப் பண்பாட்டுப் பாரம்பரியத்திலும் ஆழப்பதிந்தன. கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டன எனக்கூறலாம்.

ஆதி இலங்கையில் பௌத்தத்தின் வருகைக்கு முற்பட்ட காலத்திலேயே சிவ வழிபாடு நிலவியதற்குரிய குறிப்புக்கள் இலக்கியச் சான்றுகளில் ஆங்காங்கு காணப்படுகின்றன. இலக்கியச் சான்றுகளிலும், ஆதி பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படும் குறிப்புக்களைக் கொண்டு அக்காலத்தில் நிலவிய சைவசமயம் பற்றி ஓரளவே நாம் அறிய முடிகின்றது. இத்தகைய சான்றுகளின் அடிப்படையில் முறையான வரலாற்றை அமைத்துக்கொள்வதில் உள்ள பிரச்சினையை கா. இந்திரபாலா கட்டிக்காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக இலங்கை வரலாற்றை அறிந்து கொள்வதற்குக் கிடைத்துள்ள பழைய பௌத்தபாளி இலக்கிய மூலாதாரங்களில் தற்செயலாக இடம்பெறும் குறிப்புக்களைக் கொண்டே சமய நிலையைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளவேண்டியதைப் பின்வரும் கருத்துப் புலப்படுத்துகின்றது:

ஆதி இலங்கையில் இருந்த இந்துக்கள் பற்றியும் இந்துக் கோயில்கள் பற்றியும் போதிய தகவல்கள் எங்களுடைய இலக்கிய ஆதாரங்களிலே பேணப்படவில்லை. தொல்பொருளியல் ஆராய்ச்சி நாடு முழுவதும் பரவலாகச் செய்யப்படாத காரணத்தினால் தற்போது எமக்குத் தொல்பொருளியற் சான்றுகளும் போதிய அளவில் இல்லை.

மேற்குறித்த கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டதற்கேற்ப இன்றைய நிலையில் கூடுதலாக ஆதிகாலம் பற்றிய தகவல்களைத் தொல்பொருளாராய்ச்சி மூலம் பெறத் தொடங்கிய காரணத்தால், இதுவரை காலம் இலங்கையின் ஆதிவரலாற்றை ஆராய்ந்தவர்கள் பயன்படுத்திய இலக்கிய ஆதாரங்கள் ஓரளவு முக்கியத்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இலக்கிய ஆதாரங்களிற் கூறப்பட்ட விஷயங்களை மறுபரிசீலனை செய்யக்கூடிய வகையில் தொல்பொருட் சான்றாதாரங்கள் அமைந்துவிடுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஈழத்தின் சமயமரபு, பண்பாடு பற்றி அறிவதற்கு இப்புதிய ஆராய்ச்சிகள் வழிவகுத்துள்ளன. இத்தகைய ஆய்வின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக்காட்டும் வகையில் கா. இந்திரபாலா குறிப்பிடும் கருத்துக்கள் கவனித்தற்குரியன. இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு பல இடங்களிற் பரவியிருந்த பெருங்கற் பண்பாடே இலங்கையிலும் பரவலாகக் காணப்பட்டது என்ற செய்தி மிக முக்கியத்துவமுடையதொன்றாகும். ஈழத்தின் தொன்மையான வழிபாட்டுத் தலங்களின் தோற்றமும் இப்பண்பாட்டோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. அக்கருத்து வருமாறு:

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் கேரளம், தமிழ்நாடு போன்ற இடங்களில் பரவியிருந்த பண்பாடு தொல்பொருளியல் ஆராய்ச்சியாளராலே பெருங்கற் பண்பாடு எனப்படுகின்றது. இந்தப் பண்பாட்டு நிலையிலிருந்துதான் சில நூற்றாண்டுகளுக்குள் இராச்சியங்களும் பிற நிறுவனங்களும் வளர்ந்து வரலாற்றுக் காலம் தொடங்கியது. தென்னிந்தியாவில் இடம்பெறும் பழைய வழிபாட்டுத் தலங்கள் இத்தகைய ஒரு பண்பாட்டுப் பின்னணியிலிருந்தே தோன்றின. சிறப்பாக வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்தில் கரையோரங்களில் அமைந்திருந்த ஆலயங்கள் பிரபல வழிபாட்டுத் தலங்களாக வளர்ந்தன.

இக் கருத்து முக்கியத்துவமுடையது. இலங்கையிலும் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலே காணப்பட்ட நிலையே இருந்தது என்ற கருத்தும் இலங்கையில் அண்மையில் நடைபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியின் அடிப்படையில் நிறுவப்படுகின்றது. இச்சான்றுகளின் துணைக்கொண்டு இந்நாட்டின் பல பாகங்களிலும் பெருங்கற் பண்பாடு 2500 ஆண்டுகளுக்கு முன் பரவியிருந்ததெனவும் தென்னிந்தியாவின் பழைய வழிபாட்டுத் தலங்கள் எவ்வாறு இப்பண்பாட்டின் பின்னணியில் தோன்றி வளர்ந்தனவோ அவ்வாறே இங்கும் பழைய வழிபாட்டுத் தலங்கள் அதே பின்னணியில் தோன்றி வளர்ந்தன என்றும் தெரிவிக்கப்படும் கருத்து கவனித்தற்குரியது.



இத்தகைய சூழ்நிலையிலேயே ஆதி இலங்கையில் நிலவிய சைவசமயம் பற்றிய விஷயங்களை நாம் அறியவேண்டியுள்ளது. இக்கட்டுரையில் ஈழத்துச் சைவம் பற்றி விரிவாக ஆராய்வது நோக்கமன்று. ஆனால் ஆதிவரலாற்றுக்காலம் முதல் காணப்பட்ட சமயமரபில் சைவம் பற்றியும் சிவாலய மரபு பற்றியும் ஒரு பொதுவான வரலாற்றுப் பின்னணியை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஈழத்துச் சிவாலயங்களிற் பேணப்படும் வழிபாட்டு மரபு மற்றும் சிவ விக்கிரகங்கள் தொடர்பான ஆய்வுகளுக்கு இத்தகைய பின்னணி துணை புரிவதாகும்.

## சாசன, இலக்கியச் சான்றுகள்

இலங்கையின் தெளிவான வரலாறு தொடங்கும் காலமெனக் குறிக்கப்படும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் இந்நாட்டின் மிகப் பழைய சான்றாதாரங்களாக அமைந்து தொன்மையான வரலாற்றை அறியத் துணைபுரிகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆதிகாலச் சமயநிலை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களில் சைவத்தோடு தொடர்புடைய பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்குமிடத்து இத்தீவில் சிவ வழிபாடு நிலவியிருக்க முடியுமெனக் கருதத் தோன்றுகின்றது. 'சிவ' என்ற பெயரைத் தாங்கிய பலர் இலங்கையில் இருந்தமை பற்றி இச்சான்றாதாரங்களினால் தெரியவருகின்றது. அரசர்களின் பெயர்களும் 'சிவ' என்ற பெயரை இறுதியிற் கொண்டு காணப்பட்டுள்ளன. **மஹாவம்ஸ** என்ற பௌத்த பாளி மொழி நூலிலும் 'சிவ' என்ற சொல்லுடன் கூடிய பெயர்கள் காணப்பட்டமைக்கு ஆதாரம் உண்டு. ஆதி இலங்கை மன்னர் பெயர்ப் பட்டியலில் **கிரிகண்டசிவ, மகாசிவ, முடசிவ** போன்ற பெயர்கள் இடம் பெற்றமைக்கு இவ்விலக்கியம் ஆதாரமாக அமைகின்றது. இப்பெயர்களிலிருந்து இவர்கள் சைவர்களாக இருந்திருக்கலாமென ஊகிக்க முடிகின்றது. இவ்வூகத்தை ஓரளவு உறுதிசெய்யும் வகையில் கிறித்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வழிபாட்டுக்குரிய கோயில்கள் காணப்பட்டிருக்க வேண்டுமென்ற கருத்தை **மஹாவம்ஸ** நூல் தரும் குறிப்பிலிருந்து அறிய முடிகின்றது. பண்டுகாபய அரசன் அநுராதபுரத்தில் 'சிவிகசாலா' என்ற கட்டிடத்தை நிர்மாணித்தான் என இந்நூல் குறிப்பிடுகின்றது. **மஹாவம்ஸ** உரைநூலின் உதவியுடன் சிவிகசாலா என்பது சிவ வழிபாட்டுக் கோயிலாக இனங்காணப்படுகின்றது. இக்கட்டிடம் சைவசமயத்தோடு தொடர்பான கிரியைகள் நடந்த இடம் எனவும் இலிங்கம் வைத்து வணங்கப்பட்ட இடம் எனவும் பல கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இக்கருத்தின் அடிப்படையில் பண்டுகாபய மன்னன் காலத்திலிருந்து நிலவி வந்த சிவலிங்க வழிபாடு

இந்நாட்டின் பழைய வழிபாடாக இருந்த நிலையை ஓரளவு உறுதி செய்து கொள்ள முடிகின்றது. மகாசேன மன்னன் பௌத்தத்திற்கு ஆதரவாகவும் ஏனைய மதங்களுக்கு எதிராகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக அவன் இடித்த ஆலயங்களில் கோகர்ண ஆலயமும் ஒன்று. இந்நாட்டிலமைந்த சிவ ஸ்தலங்களைத் தரைமட்டமாக்கிய செய்தி இவ்வழிபாடு செல்வாக்குப் பெற்ற வழிபாடாகத் தொடர்ந்து வளர்ந்து வந்தது என்பதைப் புலப்படுத்துகின்றது

ஈழத்துச் சிவாலய வரலாற்றில் திருக்கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் ஆகிய இரு சிவத்தலங்களும் முக்கியத்துவமுடையன. ஈழத்தில் சிவாலய மரபினைப் பேணுவதில் இவ்விரு ஆலயங்களும் பெரும் பங்கு கொண்டுள்ளன. 'ஆதிகாலத்தில் வர்த்தகர்கள் வந்து சென்ற பழந் துறைகளாகிய மாதோட்டம், திருகோணமலை ஆகியவற்றிலிருந்த திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய கோயில்களின் தொடக்கம் கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கு முன்னராக இருக்க முடியும்' என்ற கருத்து இவ்விரு சிவாலயங்களின் தொன்மையை ஓரளவு மட்டிடுவதற்கு துணைபுரிகின்றது.

இத்தலங்கள் புராண இதிகாசத் தொடர்புடையனவென்பதும் குறிப்பிடத்தக்கது. ஸ்காந்த புராணத்துத் தக்ஷிண கைலாச மகாத்மியம், ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், திரிகோணாசல புராணம் போன்ற மரபுவழி நூல்களில் திருக்கோணேஸ்வரப் பெருமை பேசப்படுகின்றது. இத்தலத்தின் புராதன வரலாறு இராவணனோடு தொடர்புபடுத்தப்பட்டும் கூறப்படுகின்றது. இம்மரபுவழிக் கதைகள் இத்தலத்தின் தொன்மையை நிலைநாட்டுவன. திருக்கேதீச்சரத்திற்கும் பழைய புராண மரபொன்று கூறப்படுகின்றது. வடமொழி ஸ்காந்த புராணத்தின் பகுதியாகிய தக்ஷிணகைலாச மகாத்மியத்திலே ஸ்ரீ கேதீஸ்வர க்ஷேத்திர வைபவம் என்ற பிரிவிலே திருக்கேதீச்சரச் சிறப்புப் பௌராணிக மரபில் கூறப்படுகின்றது. கேது, மயன், மகாதுவட்டா, இராமன், அகத்தியர் ஆகியவர்களும் வழிபாடு செய்த பெருமை இத்தலத்திற்குரியதாக மரபுவழிச் செய்தி கூறும்.

மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையில் இத்தலம் விஜயனோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. குடிகளை வசப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தினால் விஜயராசன் சமய வழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்குரிய உரிமையை வழங்கி, தன் சமயாசார ஒழுக்கத்தையும் பாதுகாத்துக்கொண்டான். விஜயன் காலத்தில் ஆகம மரபுடன் இயைந்தவாறு சிவாலயத்தை நிர்மாணம் செய்தலும் அவற்றைப் புதுப்பித்தலும் அவ்வாலயங்களுக்குச் சிவாசாரியர்களைக் கொண்டு பூசனை நடத்துதலும் ஆகிய நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளதை



ஊகிக்கக்கூடியவாறு இந்நூலில் குறிப்புகள் உள்ளன. அத்தகையதொரு விபரத்தைப் பின்வரும் குறிப்பு புலப்படுத்துகின்றது:

அரசாட்சியை ஆரம்பிக்க முன்னமே விஜயராசன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை யெழுப்பிக் கொண்டான். கீழ்த்திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோவிலை நிறுத்தி, மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேதீச்சரச் சிவாலயத்தைப் புதுப்பித்து தென்றிசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரேச்சுரன் கோவிலை யெழுப்பி, வடதிசைக்குக் கீரிமலைச்சாரலில் திருத்தம்பலை யெனும் பகுதியிலே திருத்தம்பலேச்சுரன், திருத்தம்பலேசுவரி கோவில்களையும் அவைகளின் சமீபத்திலே கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்து அவ்வாலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி நீலகண்டாசாரியனின் மூன்றாங் குமாரன் வாமதேவாசாரியர் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பன்னியாகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து அக்கிரகாரம் முதலிய வசதிகளுங் கொடுத்திருத்திவைத்தான்.

ஈழத்துச் சிவாலய மரபில் இக்குறிப்பு முக்கியத்துவமுடையது. இக்கருத்தினை பீரிஸ் அவர்களின் குறிப்பும் உறுதிசெய்வதாகவுள்ளது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்பே இலங்கையில் ஐந்து சிவாலயங்கள் இருந்தனவென்றும், மகாதித்தவில் திருக்கேதீஸ்வரமும், சிலாபத்தில் முனீஸ்வரமும், மாந்தோட்டைக் கருகில் தண்டேஸ்வரமும் பெரிய கொட்டியாரக் குடாவுக்கு எதிரே திருக்கோணேஸ்வரமும் காங்கேசன்துறைக்கு அண்மையில் நகுலேஸ்வரமும் இருந்தன என்ற குறிப்பு கவனித்தற்குரியது. இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்து, ஈழத்துச் சிவாலய வரலாற்றில், திருக்கேதீச்சரமும் திருக்கோணேஸ்வரமும் நகுலேஸ்வரமும் முன்னேஸ்வரமும் முக்கியத்துவம் பெற்ற சிவாலயங்களாகவும் பௌராணிக மரபு கொண்டவையாகவும் விளங்கிவந்துள்ளன.

## பாடல் பெற்ற தலங்கள்

திருக்கேதீச்சரமும் திருக்கோணேஸ்வரமும் பாடல்பெற்ற சிறப்புக்குரியன. தமிழ்நாட்டில் சைவசமய பக்தியியக்கத்தினைத் தலைமையேற்று நடத்திய திருஞானசம்பந்தர் தொன்மைவாய்ந்த இச்சிவ தலங்களைப் போற்றும் அளவுக்கும் ஈழத்துச் சிவாலய பாரம்பரியச் சிறப்பைத் தமிழ் நாட்டினர் தெரிந்துகொள்ளும் அளவுக்கும் இவ்விரு சிவாலயங்களும் சிறப்புடன் விளங்கியுள்ளமை தெளிவாகின்றது. பல்லவர் காலத்தில் திருக்கோணேஸ்வரத்திற்கு இருந்த சிறப்புப் பற்றியறிய கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரின் திருகோணமலைப் பதிகம்



தேசிய நூலகப் பிரி

ஒன்றே போதுமானது. ''கோணமாமலையமர்ந்தாரே'' என்ற சொற்றொடர் இப்பதிகத்தின் சிறப்பினுக்கும் தலத்தின் பெருமைக்கும் முத்திரையாக அமைகின்றது

திருக்கேதீச்சரத்தைப் பொறுத்தவரை தேவார முதலிகள் காலத்துக்கு முன்னரே அது சிவத்தல அமைவோடு இருந்ததென்பது ஞானசம்பந்தரும் சுந்தரரும் தனித்தனியே பாடிய தேவாரப் பாடல்களால் தெரியவருகின்றது. சமகாலத்திலும் அதற்கு முன்னரும் இத்தலத்தின் சிறப்பு, தமிழகத்தில் நன்கு நிலவியதை இப்பாடல்கள் மூலம் அறியலாம். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஈழத்தில் நிலவிய சிவாலய மரபு. சைவநெறி, சைவச்சால்பு ஆகியவற்றைத் தெளிவுபடுத்தும் சான்றாதாரங்களாக அமைவன ஞானசம்பந்தர் இவ்விரு தலங்கள் மீதும் பாடிய திருப்பதிகங்கள்.

இதே வகையில் இதிகாச புராண வரலாற்றுப் பெருமை கொண்ட சிவத்தலம் முன்னேஸ்வரமாகும். இதே காலமளவில் இத்தலமும் நகுலேஸ்வரமும் பிரசித்தி பெற்றவையாய் இருந்திருக்கமுடியும்.

## சோழர் ஆட்சியில்

குளக்கோட்டு மன்னன் கோணேசர் ஆலயத்தையும் முன்னேஸ்வரத்தில் அழிவுற்றுச் சிதைந்த நிலையிலிருந்த சிவாலயத்தையும் சீர்திருத்தி, திருப்பணி செய்வித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தான் என்ற மரபுவழிச் செய்தி ஈழத்தில் மன்னர் பரம்பரையினர் சிவாலய மரபினைப் பாதுகாப்பதில் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுவதாய் உள்ளது.

பதினோராம் நூற்றாண்டில் சோழர் இலங்கையைக் கைப்பற்றிய தன் விளைவாக ஈழத்தில் சிவாலய மரபு மேலும் வளர்ச்சிபெறுவதற்குரிய சூழ்நிலை உருவாகியது. சோழராட்சி இலங்கையில் நிலைபெற்றபோது திருக்கேதீச்சரமும் கோணேசர் கோயிலும் அவர்களது ஆதரவு பெற்றன எனக் கொள்வதற்கு இடமுண்டு. சோழர் காலத்தில் கோணேசர் கோயிலில் இருந்த விக்கிரகங்களுட் சிலவும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழர் இலங்கையில் ஏற்படுத்திய ஆட்சியின் பயனைத் தமிழ்நாட்டின் பண்பாட்டை இங்கு விஸ்தரிப்பதற்குரிய வாய்ப்புக் கிட்டியது. தென்னிந்தியாவில் சிவாலய நிர்மாணத்திலும் சிவனது வடிவங்களைக் கல்லிலும் உலோகத்திலும் உருவாக்கும் சிற்பக் கலையிலும் பொற்காலமெனப் போற்றப்படுவது சோழர் காலமாகும். எனவே, சோழர் இலங்கைக்கு வந்தபோது இத்துறைகள் சார்ந்த பண்பாடும் கூடவே பரவியது எனலாம். இலங்கையில் சோழர் ஆட்சி கி. பி. **1070** வரை நீடித்தது. சோழராட்சிக் காலத்தில் பொலன்



னறுவை அதிக முக்கியத்துவம் வாய்ந்த இராஜதானியாக விளங்கியது. மற்றும் பதவியா, திருகோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களிலும் தென்னிந்தியர் குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த இடங்களிலே சைவ வழிபாட்டுத் தலங்கள் தேவைப்பட்ட காரணத்தினால் சைவக் கோயில்கள் கட்டப்பட்டன. சிதைந்த கோயில்களும் திருத்தியமைக்கப்பட்டன. எனவே, இச்சிவாலயங்களில் சிவனது வடிவங்கள் இடம்பெற்றிருக்க முடியும்.பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இராஜராஜன் இராஜதானியாக்கிய பொலனறுவையிலே அதிக சிவாலயங்கள் காணைப்பட்டன. இதுவரை இப்பிரதேசத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் பயனாகப் பத்துச் சிவாலயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கோயில்கள் யாவற்றையும் அடையாளம் கண்டு கொள்வதில் நிலவும் பிரச்சனைகளுக்கு மத்தியில் மூன்று கோயில்கள் நிச்சயமாக இனங்காணப்பட்டுள்ளன. தொல்பொருளியலாளர் இவற்றுக்கு இரண்டாவது சிவதேவாலயம், ஐந்தாவது சிவதேவாலயம், ஆறாவது சிவதேவாலயம் என்ற பெயர்களைக் கொடுத்துள்ளனர், இவற்றுள் இரண்டாவது சிவதேவாலயம் பூரணமான நிலையில் உள்ளது. சிறந்த அமைப்பைக் கொண்ட இக்கோயிலின் பெயர் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்பதாகும். ஈழத்துச் சிவாலயக் கட்டிடக்கலை பொலனறுவையில் உன்னதமாக விளங்கியமைக்குரிய சான்றாக இது அமைகிறது. சோழரது ஆட்சிக்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற பிறிதோர் நகரமாகிய பதவியாவிலும் சிவதேவாலயங்கள் கட்டப்பட்டிருந்ததைக் குறிக்கும் அழிபாடுகள் காணப்படுகின்றன. சோழரது ஆட்சிக்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற பிறிதோர் இடம் மாதோட்டமாகும். சோழர். ராஜராஜபுரம் எனப் பெயரிட்டிருந்த இவ்விடத்தில் ராஜராஜனின் நிர்வாகத்தில் உயர்பதவி வகித்த தாழிக்குமரனால் கட்டப்பட்ட கோயில் ராஜராஜேஸ்வரம் எனப் பெயரிடப்பட்டிருந்தது. இராஜராஜேஸ்வரம் திருக்கேதீச்சரத்திற்கு அளிக்கப்பட்ட புதிய பெயராக இருக்கலாம் என்ற கருத்தும் அறிஞரிடையே நிலவுகின்றது. இக்கோயில் முற்றாக அழிந்துவிட்டதாகக் கொள்ளப்படும் கருத்துக்களிடையே இக்கோயிலிலே நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய கல்வெட்டொன்று குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இவ்வாலயம் சிறப்பாகச் சிவாலய மரபைப் பேணுவதில் முக்கிய பங்கினை வகித்திருக்க முடியுமென ஊகிக்கலாம். இவர்களது காலத்தில் இருந்த பிறிதோர் கோயில் திருவிராமீஸ்வரமாகும். இக்கோயிலும் அழிந்து விட்டது.

சோழராட்சிக்குப்பின் பொலனறுவையில் பல சிவாலயங்கள் எழுந்தன. முதலாவது சிவதேவாலயம் எனக் குறிக்கப்படும் சிவாலயம் பதின்மூன்றாம் நூற்றாண்டிலே பாண்டியர் கட்டிடப்பாணியில் அமைக்கப்பட்டது. முதலாவது விஜயபாகு

வின் காலத்தில் கந்தளாயில் கட்டப்பட்ட கோயில் விஜயராஜஈஸ்வரமாக விளங்கியது. இப்போது அதன் இடிபாடுகளே காணப்படுகின்றன. பொலன்னறுவைக் காலத்திலே வடமத்திய மாகாணத்திலே பல்வேறு இடங்களில் விளங்கிய சைவக் கோயில்கள் பெரும்பாலும் அழிந்து போயின. இவை இருந்த இடங்களிலே ஒரு சில விக்கிரகங்களே கிடைக்கப்பெற்றுள்ளன. அநுராதபுர மாவட்டத்தில் வேரகல என்னுமிடத்தில் அர்த்தநாரீசுவரருடைய சிறந்த விக்கிரகம் ஒன்றும் கிடைத்துள்ளது. இத்தகைய விக்கிரகங்களை ஒரு காலத்தில் பாதுகாத்த கோயில்கள் அழிந்துள்ளன.

இவ்வாறாக மிகவும் தொன்மையான காலத்திலிருந்து ஈழத்தில் வளர்ச்சிபெற்ற சிவாலய மரபின் தொடர்ச்சியாக அடுத்து வந்த காலப்பகுதிகளில் ஆங்காங்கு கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டதோடு சிதைந்த கோயில்களைப் புதுப்பித்து புனர்நிர்மாணம் செய்யும் திருப்பணிகளும் இடம்பெற்றன. ஈழத்துச் சைவ வரலாற்றில் சிவாலயப்பணி தொடர்ந்தும் நடைபெற்றுவந்தது.

## மறுமலர்ச்சி

ஈழத்துச் சிவாலய வரலாற்றில் காலத்துக்குக்காலம் ஏற்பட்ட பிற சமயத்தவரின் எதிர்ப்புக்கள், பிறநாட்டவரின் தாக்குதல்கள் ஆகியவற்றின் காரணமாய் சிவாலயங்கள் சிதைவுறுவதும் பின்னர் அரசர்களின் ஆதரவுடன் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதும் நாம் அவதானிக்கக்கூடிய சில முக்கிய அம்சங்களாகும். இதன் காரணமாய் அவ்வக்காலப் பண்பாட்டு அம்சங்கள் கட்டிடங்களிலும் சிற்பங்களிலும் இடம்பெறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். ஈழத்துச் சிவாலய வரலாற்றில் நாம் காணும் பிறிதோர் முக்கிய அம்சம் யாதெனில், சிவாலயங்கள் பிற சக்திகளின் தாக்குதல்களுக்கு உட்படுமிடத்து அங்கு வழிபாட்டிற்கென நிறுவப்படும் விக்கிரகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றைக் கிணறுகளிலோ அன்றி வேறு பாதுகாப்பான இடங்களிலோ மறைத்து வைப்பதும் வழமையான நிகழ்ச்சியாகும். பிற்பட்ட காலத்திற் கிடைக்கப்பெற்ற பல தொன்மையான விக்கிரகங்களில் பெரும்பாலானவை பிறிதோர் தேவைக்காக நில அகழ்வு வேலைகள் இடம்பெறும்போது தற்செயலாகவே கிடைக்கப்பெற்றுள்ளதைக் கொண்டு நாம் இம்முடிவுக்கு வரவேண்டியுள்ளது. வேறு பல முக்கிய சிவவிக்கிரகங்கள் இலங்கைத் தொல்பொருள் ஆய்வாளர்களால் வெளிக்கொணரப்பட்டுள்ளன. ஈழத்துச் சிவவடிவங்கள் தொடர்பான ஆய்வுக்கு இத்தகைய விக்கிரகங்கள் இன்றியமையாதவை.



## இந்திய இலங்கைத் தொடர்புகள்

இந்திய இலங்கைத் தொடர்புகளினால் சிவ வழிபாடு பல்துறைகளில் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படலாயிற்று. அத்தகைய தொடர்புகளில் ஒன்றாகச் சிற்ப வளர்ச்சியைக் குறிப்பிடலாம். இலங்கைச் சிற்ப வளர்ச்சி இந்தியச் சிற்ப வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடையது. எங்ஙனம் இந்தியச் சிற்பங்கள் சமயத் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றனவோ அங்ஙனமே இலங்கையிலும் சிற்பங்கள் பெருமளவிற் சமயத் தொடர்பு மிக்கனவாக அமைந்துள்ளன. இந்திய கலா தத்துவத்தை அறிய விழைபவர்களுக்கு இலங்கையின் கலைப்பொருள்களாகிய சிவ வடிவங்களும் இன்றியமையாத சாதனமாக விளங்குகின்றன. இந்திய நாட்டிற்கும் இலங்கைக்கும் சமயம், கலாசாரம் ஆகிய துறைகளில் மற்றெல்லா நாடுகளிலும் பார்க்க மிக நெருங்கிய தொடர்பு பண்டைக் காலந் தொடக்கம் ஏற்பட்டிருந்ததால் இலங்கைக் கலைகளில் இந்தியக் கலைகளின் முத்திரை மிக விளக்கமாகக் காணப்படுகின்றது. இலங்கைச் சிற்பங்களைப் பற்றி வி. சிவசாமி குறிப்பிடுகையில் ''இந்தியாவிலேற்பட்ட சிற்பக்கலை மரபுகள் அதே வடிவத்திலோ அல்லது பிரதேசப்பண்புகளோடு கூடியோ இந்நாட்டிலே வளர்ந்து வந்துள்ளன. இதனாலே சில வகையிலே சிற்ப வடிவங்கள் இந்திய 'வடிவங்களின் பிரதிகளாகவோ அல்லது இலங்கைக்கே உரிய சிறப்புப் பாணியுடனோ விளங்குகின்றன'' எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஈழத்திலுள்ள சிற்பங்கள் கல்லிலும் செம்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி, பொன் முதலிய உலோகங்களிலும் மரத்திலும் யானைத் தந்தத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. சிவவடிவங்களிற் பெரும்பாலானவை கல்லிலும் உலோகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. கோபுரங்களில் சுதையிலான வடிவங்கள் காணப்படுகின்றன. இந்தியச் சிற்பக்கலை மரபும் விதிமுறைகளுமே இங்கும் பின்பற்றப்பட்டிருக்கலாமெனக் கொள்ள இடமுண்டு.

இலங்கையின் ஆரம்பகாலச் சிற்பங்களைக் கொண்டுள்ளது எனக் கருதப்படும் இசுருமுனியாவில் கருங்கற்களைக் கொண்டு சிற்பம் வடிக்கும் மரபு பேணப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் தமிழகத்திலே பல்லவர் காலத்தில் மலர்ச்சி பெற்ற சிற்பக்கலைச் சாயல் கொண்டிலங்குகின்றன. இசுருமுனியாவில் சிவனும் பார்வதியும் விளங்கும் புடைப்புச் சிற்பமொன்று மாமல்லபுரச் சிற்பங்களை நிகர்க்கும் வண்ணம் உள்ளது. இதனை வடித்த கலைஞர் பல்லவர் கலைப்பாணியில் பயிற்சி பெற்றிருக்கும் நிலையையே இது சுட்டுகின்றது. பல்லவர் பண்பாட்டு அம்சங்கள் இங்கு பரவியதையே இவ்வொப்பீடு காட்டி நிற்கின்றது.

பல்லவர் பாண்டியர் காலத்திலிருந்து இலங்கைக்குப் பல தென்னிந்தியச் சிற்பிகள் வந்து கலைமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். திருக்கேதீச்சரம் ஒரு காலத்தில் பல கோயில்களை உள்ளடக்கிய ஒரு கோயிற் பட்டினமாகத் திகழ்ந்த காலத்தில் இவ்வாலயக் கோட்டஞ் சிற்பத்தில் வல்ல ஸ்தபதிகளுக்கு உறைவிடமாக இருந்ததாகக் கருதப்படுகின்றது.

ஈழத்தில் நிர்மாணிக்கப்பட்ட சோழர்காலக் கோயில்களில் இடம்பெற்ற விக்கிரகங்களை உருவாக்கத் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிற்பிகளும் கலைஞர்களுமே நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆகம, சிற்பசாத்திர முறைப்படி சிவாலயங்களும் அங்கு வழிபாட்டிற்கென சிவமூர்த்தங்களும் அமையவேண்டியதன் பொருட்டு உலோக விக்கிரகக் கலையில் நல்ல தேர்ச்சியும் கோயில்களை நிர்மாணிப்பதில் நல்ல பயிற்சியும் அனுபவமும் வாய்ந்த சிற்பிகளே நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஈழத்தில் இத்தகைய கலைப்படைப்புக்கள் சோழர் கலைப்பாணியைக் காட்டிநிற்பதால் அவை இத்துறைகளில் தேர்ச்சிபெற்ற தென்னிந்தியச் சிற்பிகளின் ஆக்கங்களாக அமைந்திருக்க இடமுண்டு. இத்தேவைக்காக அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கலாமென ஊகிக்கலாம். பொலன்னறுவை ஐந்தாம் தேவாலயத்திலிருந்து அகழ்வாய்வின் மூலம் பெறப்பட்ட உலோக வடிவங்களின் கலையம்சங்கள் சோழர் பாணியிலமைந்த சிற்பக்கலை மரபு இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிலையைக் காட்டிநிற்கின்றன.

பதினான்காம் நூற்றாண்டில் ஈழத்தில் தென்னிந்திய சிற்பிகள் பலர் இருந்தமை பற்றியும் அறியமுடிகின்றது. இக்காலப்பகுதியில் குறிப்பாக நான்காம் புவனேகபாகுவின் காலத்தில் வாழ்ந்த கணேஸ்வராசாரியார், ஸ்தபதிராயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவுக்கும் ஈழத்திற்குமிடையே ஏற்பட்ட நெருங்கிய கலாசாரத் தொடர்பினால் கம்பளை இராச்சியத்தில் சிற்பிகள் பலரைக் கொண்ட குழுவொன்று 'ஸ்தபதிகணம்' என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இக்குழுவுக்குத் தலைமை தாங்கியவர் கணேஸ்வராசாரியார் ஆவர். கம்பளைக்கருகில் உள்ள கடலாதெனிய பௌத்த ஆலயம் கட்டப்பட்டபோது ஸ்தபதி 'கணதிபதி' தலைமையில் சிற்பாசாரியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். இதிலிருந்து ஈழத்துக் கலைப்பணிகளில் தென்னிந்திய சிற்பிகள் கொண்ட ஈடுபாடு புலப்படுகின்றது.

## கோயில் வழிபாடு

ஈழத்தில் சோழர் சிவாலயங்களை நிர்மாணித்ததோடு மாத்திரமன்றி அவ்வாலயங்களில் மரபுவழியில் அமைந்த கிரியைகள் முறையாக



நடைபெறுவதற்கு உரிய ஒழுங்குகளையும் மேற்கொண்டனரென்ற செய்தியும் இங்கு குறிப்பிடற்பாலது. சோழரது ஆட்சிக்காலத்தில் அதிக அளவிலான பிராமணர்களும் இலங்கையில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களது ஆட்சியில் பிராமணர்களை அதிகமாகக்கொண்ட குடியேற்றம் **சதுர்வேதி மங்கலம்** என்ற பெயர் பெற்றிருந்தது. தென்னிந்தியாவில் கோயிலோடு தொடர்புடைய சமய சாஸ்திரங்களையும் மரபுகளையும் பேணிப் பாதுகாப்பதில் பிராமணர்கள் பெரும் பங்கு வகித்தனர். சிவாலயம் சமூகப் பண்பாட்டின் மையமாகத் திகழ்ந்ததால் இவர்கள் இந்நிறுவனத்தோடு கொண்டிருந்த தொடர்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. கோயிலில் நடைபெறும் கிரியைகளில் பெரும் பங்கு கொண்டு சிவாலயமரபைப் பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு இவர்களைச் சார்ந்ததாகவிருந்தது. தீவின் பல இடங்களில் எழுப்பப்பட்ட சிவாலயங்களில் தென்னாட்டிலிருந்து பிராமணர்கள் வரவழைக்கப்பட்டு சிவாசாரியர்களாக நியமிக்கப்பட்டனர். தென்னாட்டிற் காணப்பட்டதைப்போன்றே இங்கும் சிவாலயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலன்னறுவை வானவன் மாதேவீச்சரக் கோயிலின் நிர்வாகத்தின் பல விவரங்களைத் தரும் கல்வெட்டொன்றின் மூலம் **பட்டர், இரமவித்தர், சிவப்பிராமணர், பதிபாதமூலப்பட்டுடைப் பஞ்சாசாரியர்** போன்ற பணித்துறையாளர்களாகப் பிராமணர் நியமிக்கப்பட்டதை அறியக்கூடியதாக உள்ளது. இவர்களில் முதல் மூவர் சமய அறிவில் மேம்பட்டோராய், சிவாலயத்தின் சமயக் கிரியையோடு நன்கு பயிற்சி பெற்றவர்களாக விளங்கினர். இவர்கள் சிவாலயத்தில் நிறுவப்பட்ட சிவ வடிவங்களுக்குரிய கிரியைகளையும் விழாக்களையும் நடத்தினர். இதில் **பதிபாதமூலப்பட்டுடைப் பஞ்சாசாரியர்** என்ற பெயர் அதி உயர்ந்த தகைமை பெற்ற ஐவரைக் கொண்ட பிராமணர் குழுவைக் குறித்ததாக இருக்கலாம். கர்ப்பக்கிருகத்தில் உள்ள மூலமூர்த்திக்குரிய சில கிரியைகளை நடத்துவதற்கு இவர்கள் பொறுப்புடையவராக விளங்கியிருக்க முடியும். சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிவாலயங்களில் இத்தகைய சிவாசாரியர்கள் நியமிக்கப்பட்டதைக் கொண்டு அங்கு நிறுவப்பட்ட சிவனது வடிவங்களுக்கு ஆகம மரபின் அடிப்படையிலான கிரியைகள் நிகழ்த்தப்படுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமெனக் கொள்ள இடமுண்டு.

## சிவ வடிவங்கள்

ஈழத்துச் சிவ வழிபாடு பற்றி ஆராயுமிடத்து சிவாலயங்களில் வழிபாட்டிற்கென நிறுவப்பட்ட சிவ வடிவங்கள்பற்றி அறிவதும் சுவாரஸ்யமானதாகும். இத்தகைய சிவவடிவங்களில் பெரும்பாலானவை

அகழ்வாய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவை. சில வடிவங்கள் சிவாலயங்களில் மீண்டும் வழிபாட்டிற்காக நிறுவப்பட, பல தொல்பொருட்காட்சிச்சாலையிலுள்ளன. இவற்றுள் அதிகமானவை அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய இடங்களிலே கிடைக்கப்பெற்றன. ஈழத்தில் நவீன காலம் வரை சிவாலய மரபைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் நிறுவப்பட்ட பிரதான சிவாலயங்களில் இடம்பெறும் வடிவங்களும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட தாக்குதல்களுக்கும் அழிவுகளுக்கும் மத்தியில் இன்று எமக்குக் கிடைக்கும் நிலையிலுள்ள சிவவடிவங்களைக் கொண்ட ஈழத்துச் சிவவடிவங்களைப் பற்றிய கருத்துக்களை நாம் அறியவேண்டியுள்ளது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் எச். சி. பி. பெல் (H.C P Bell) என்ற ஆராய்ச்சியாளரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது பல சைவக் கோயில்களின் அழிபாடுகளுக்கு மத்தியில் பல சிவலிங்கங்கள் இவ்விடத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இதே பிரதேசத்தைச் சேர்ந்த வச்சக்குளத்துக்கு வடக்கில் சிவலிங்கங்களும், விஜயாராமத்தில் சிவனது புடைப்புச் சிற்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சைவக்கோயில்களின் இடிந்த பாகங்களும் இவற்றினூடே காணப்படுவதால் அனுராதபுரத்திலே ஏழாம் நூற்றாண்டையடுத்த காலப்பகுதியில் சிவ வழிபாடு வளர்ச்சி பெற்று விளங்கியிருக்க வேண்டும்.

சோழர் பதினோராம் நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் உருவாகிய சிவாலயங்களின் அழிபாடுகளின் மத்தியில் கல்லிலும் உலோகத்திலும் உருவான பல விக்கிரகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பொலன்னறுவை வீழ்ச்சியடைந்த காலத்தில் சில விக்கிரகங்கள் கோயில்களில் புதைக்கப்பட்டும் வேறிடங்களுக்கு அகற்றப்பட்டும் பல காலமாக எவருக்கும் தெரியாமல் மறைந்தன. இவற்றுள் பொலன்னறுவைச் சிவாலயப் பிரதேசங்களில் நிலத்தின் கீழே புதைக்கப்பட்ட விக்கிரகங்களே இந் நூற்றாண்டிலே பலமுறை நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளின் போது வெளிவந்தனவாகும். இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் எச். சி. பி. பெல் பொலன்னறுவையில் நடத்திய அகழ்வாய்வின் போது இத்தகைய பழைய சிவ வடிவச் சிலைகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாக அறிஞர் பல்வேறு நிலைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளனர். ஆனந்த குமாரசாமி தமது நூலொன்றில் சிவனது இவ்வடிவங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பொலன்னறுவையில் நடராஜ வடிவங்களே அதிக அளவில் கிடைத்துள்ளன. இவை தமிழ்நாட்டு வடிவங்களோடு ஒத்த வனப்புமிக்கவை. நடராச வடிவமொன்று பொலன்னறுவை முதலாம் சிவதேவாலயம்



எனப்படும் பாண்டியர் பாணியிலமைந்த பொலன்னறுவைச் சிவன் கோயிலிலிருந்து 1907 இல் பெறப்பட்டது. இரு புறங்களிலும் நுட்பமான வேலைப்பாடுகளுடன் கூடிய மகரங்களின் வாயிலிருந்து வெளிப்படும் திருவாசி வனப்புடன் விளங்குகின்றது. பத்மாசனத்தில் ஆடும் கோலத்தில் நிற்கும் நடராசரின் விரிசடை மிகவும் நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றது. விரிசடையின் வலப்புறத்தில் கங்கையின் வடிவம் தெளிவாகவுள்ளது. இடப்புறத்தில் நாகமும் சந்திரப்பிறையும் வனப்புடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. கபாலமும் தலையணியில் காணப்படுகின்றது. இவ்வடிவத்தில் நடராச வடிவத்திற்குரிய ஏனைய பொது அம்சங்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. அபஸ்மார புருஷனின் வடிவம் தெளிவாகவுள்ளது. காலில் சிறுமணி காணப்படுகின்றது. சிற்பநுட்பமும் கலையெழிலும் மிக்க இவ்வடிவம் தென்னிந்திய சிற்பங்களோடு ஒப்பிடுதற்குரியது.

முதலாம் சிவதேவாலயத்திற் கிடைத்த மற்றுமொரு நடராசரும் குறிப்பிடத்தக்கது. இவ்வடிவம் பெருமளவில் முதலாவது சிலையைப் போன்ற வடிவமைப்பையுடையது. எனினும் விரிசடையில் சில நுட்பமான வேறுபாடுகள் நிலவுகின்றன. விரிசடையின் ஒவ்வொரு பகுதியும் பின்னல் வடிவில் அமைந்துள்ளது. ஜடாமகுடமும் பிறிதோர் பாணியில் காணப்படுகின்றது. இவ்வடிவத்தைச் சுற்றி திருவாசி காணப்படவில்லை. கலா விமர்சகர்கள் இதனை மிகச் சிறந்த நடராஜ விக்கிரகங்களுள் ஒன்று என வியந்து பாராட்டியுள்ளனர். பொலன்னறுவை நடராச வடிவங்களுள் இதன் கலைச்சிறப்பு மிகுதியாக உள்ளது. இந்நடராச வடிவத்தின் விரிசடையின் அமைப்பு மிகவும் நுட்பமாக விளங்குவதே இச்சிறப்புக்குக் காரணமாகும். சம்பந்தர் ''ஏரார் புரி புன்சடை யெம்மீசனை'' எனப் புகழ்ந்து பாடுவதற்கேற்ற அமைப்பை விரிசடை கொண்டு விளங்குகின்றது.

பொலன்னறுவை ஐந்தாம் சிவதேவாலயத்தைச் சேர்ந்த மூன்றாவது நடராச வடிவத்தில் சிற்ப நுட்பத்திறன் ஏனையவற்றுடன் ஒப்பிடுமிடத்து சற்றுக் குறைவாகவேயுள்ளது. கொழும்பிலிருந்து கல்கத்தா அரும்பொருளகத்திற்கு வாங்கிச் செல்லப்பட்ட இன்னுமொரு நடராச சிலை திருவாசியுடன் முழுமைபெற்றுக் காணப்படுவதோடு ஏனைய பொலன்னறுவைச் சிலைகளினின்றும் வேறுபடுகின்றது. இதில் சிங்களக் கலைப்பண்பு மிளிர்வதாக ஆனந்த குமாரசுவாமி கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் 1960 ஆம் ஆண்டு திரு. கொடகும்புர அகழ்வாய்வின்போது ஐந்தாம் சிவ தேவாலயத்திற்குப் பின்புறமாக நடராசர் சிலையுடன் வேறுபல விக்கிரகங்களையும் கண்டுபிடித்தார்.



134089

இலங்கையிற் கிடைத்த நடராச சிலைகளுள் இதுவே மிகப் பெரிதாக அமைகின்றது. ஜடாமகுடத்துடன் கூடிய இவ்வடிவத்தில் விரிசடை இல்லை. காதுகளில் குண்டலங்கள் காணப்படவில்லை. திருவாசி விக்கிரகத்திற்கு வனப்பை அதிகரிக்கின்றது. திருவாசி தனியாகக் கண்டு பிடிக்கப்பட்டதாக கொடகும்புர தெரிவிக்கின்றார். மூர்த்தத்தில் அக்கினியைத் தாங்கியிருக்கும் கையும், வலதுபுற அபய ஹஸ்தமும் தட்டையாகக் காணப்படுவது கவனித்தற்குரியது. அபய முத்திரையுடன் விளங்கும் முன் வலது கரத்தில் ஐந்து தலைநாகம் காணப்படுவது ஒரு முக்கிய அம்சமெனக் குறிப்பிடும் சிவராமமூர்த்தி, திருஞானசம்பந்தரின் தேவாரம் குறிப்பிடும் கருத்திற்கிணைய உள்ளதாகக் குறிப்பிடுகின்றார். சிவனது கால்களைச் சதங்கைகள் அணிசெய்கின்றன இவ்வம்சம் இலங்கையிலுள்ள நடராச வடிவங்களில் சிறப்பாகக் காணப்படுகின்றதென சிவராமமூர்த்தி குறிப்பிடுகின்றார். பாண்டிய நாட்டைச் சேர்ந்த வடிவங்களிலும் இச்சிறப்பம்சம் இடம்பெறுவதாகக் கூறுகின்றார். திருவாசியின் பீடத்தில் இசைவாத்தியங்களை இசைக்கும் கலைஞர்கள் நால்வருடைய வடிவங்கள் காணப்படுகின்றன, இவர்கள் தாளம், சங்கு, குழல், மத்தளம் ஆகிய நான்கு வாத்தியங்களை இசைக்கும் நிலையிற் சித்திரிக்கப்பட்டுள்ளனர் உலோகச் சிற்பங்களில் இவ்வம்சம் இடம்பெறுவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்பதைக் கொடகும்புர சுட்டிக்காட்டுகின்றார். சிவராமமூர்த்தி இவ்வடிவங்களைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் காரைக்காலம்மையார் தாளத்தோடும் பூதகணம் சங்கோடும் இருஷியொருவர் புல்லாங்குழலோடும் ஸ்கந்தன் கடத்துடனும் இன்னுமொரு பூதகணம் தாளத்தோடும் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். சிவராமமூர்த்தியின் கருத்துப்படி சம்பந்தரின் தேவார வர்ணனைகளுக்கேற்ப இவ்வடிவத்திற் சில அம்சங்கள் காணப்படுவதால், இத்தகைய தேவாரப்பதிகங்களும் சிலவடிவங்களை வடிக்கும் சிற்பியொருவனுக்குப் பிரமாணமாக அமையாதவிடத்தும் துணைபுரிய வல்லன என்ற கருத்தை நாம் உருவாக்கிக் கொள்ள முடிகின்றது.

இதே இடத்தில் திரிபங்க நிலையில் உள்ள பிறிதோர் சிவவடிவம் தென்னிந்திய தஞ்சாவூர்ப் பாணியை நினைவூட்டுகின்றது. இடதுகால் ஸ்வஸ்திக நிலையில் உள்ளது, தலையில் ஜடாமகுடம் சிறந்து விளங்குகின்றது. கபாலம் ஒன்றும் காணப்படுகின்றது. அணிகலன் உடலைச் சிறப்பாக அணிசெய்கின்றது. சில ஆராய்ச்சியாளர் இவ்வடிவம் சிவனது சந்தியா நிருத்தத்தைக் குறிப்பதாகக் கொள்வர்.

பொலன்னறுவையில் முதலாம் சிவ தேவாலயத்திற் கண்டுபிடிக்கப்பட்ட சிவனும் பார்வதியும் இணைந்த வடிவம் குறிப்பிடத்தக்கதொன்று. அழகிய பிரபாவலியுடன் கூடிய இம்மூர்த்தத்தை ஆலிங்கன சந்திரசேகர வடிவமாகக் கொள்ளலாம்.



முதலாம் சிவ தேவாலயத்திற் கிடைக்கப்பெற்றுள்ள (1808) பிறிதோர் வடிவம் உமையாறு மூர்த்தியாகும். பத்மபீடத்தில் அமர்ந்துள்ள சிவனும் பார்வதியும் தமக்கேயுரிய லட்சணங்களுடன் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவையில் 1960 இல் நடத்தப்பட்ட அகழ்வாய்வின் போது ஐந்தாம் சிவ தேவாலயத்தில் கிடைத்த வடிவங்களில் சோமஸ்கந்த மூர்த்தியின் வடிவமும் ஒன்று. இம்மூர்த்தத்தின் சிவவடிவம் மாத்திரமே கிடைத்துள்ளது. ஏனைய உமையவளின் விக்கிரகமும் ஸ்கந்தனது விக்கிரகமும் கிடைக்கவில்லை. சோமாஸ்கந்த மூர்த்திக்குரிய சிவனடி அமைப்பு சுகாஸன அமைப்பைக் கொண்டுள்ளது.

பொலன்னறுவை சிவாலயங்களிலிருந்து பெறப்பட்ட இச்சிவவடிவங்கள் ஈழத்துச் சிவ விக்கிரவியல் மரபை அறிவதற்கு இன்றியமையாத சான்றுதாரங்களாக அமைவன. இலங்கையில் கிடைத்த இவ்வடிவங்கள் தமிழ்நாட்டுச் சிற்பமரபாக வெளிக்காட்டுவனவாயுள்ளன.

பொலன்னறுவைச் சிற்பங்களுக்கு அடுத்தபடியாக திருகோணமலையில் கிடைத்த சிவவடிவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கோணேசர் கோவிலுக்குரியவையாகக் கருதப்படும் இவ்விக்கிரகங்கள், திருகோணமலைக் கோட்டைக்கு வெளியே கிடைத்தவை. கிணறுகள் வெட்டப்பட்டபோது 1950 இல் தற்செயலாகக் கிடைக்கப்பெற்ற இவ்வடிவங்களில் சிவனது அமர்ந்த கோலத்திலுள்ள வடிவமும் சந்திரசேகர வடிவமும் சந்திரசேகர வடிவமும் குறிப்பிடத்தக்கன. கோணேஸ்வரரின் விக்கிரகவியல் மரபை அறிவதற்கு இன்றியமையாத சான்றுதாரங்களா அமைவன. இலங்கையில் கிடைத்த இவ்வடிவங்கள் தமிழ்நாட்டுச் சிற்பமரபை வெளிக்காட்டுவனவாக உள்ளன.

பொலன்னறுவைச் சிற்பங்களுக்கு அடுத்தபடியாக திருகோணமலையில் கிடைத்த சிவவடிவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கோணேசர் கோவிலுக்குரியவையாகக் கருதப்படும் இவ்விக்கிரகங்கள், திருகோணமலைக் கோட்டைக்கு வெளியே கிடைத்தவை. கிணறுகள் வெட்டப்பட்டபோது 1950 இல் தற்செயலாகக் கிடைக்கப்பெற்ற இவ்வடிவங்களில் சிவனது அமர்ந்த கோலத்திலுள்ள வடிவமும் சந்திரசேகர வடிவமும் குறிப்பிடத்தக்கன. கோணேஸ்வரரின் விக்கிரகம் மிகச்சிறந்த உலோகத்தினால் வடிக்கப்பட்டுள்ளது. இவ்விக்கிரகம் கூடிய அளவு கொண்ட தங்கமும், செம்பும் மற்றைய உலோகங்களும் சேர்ந்த கலவைகொண்டு உருவாக்கியதெனக் கருதப்படுகின்றது.

ஈழத்துச் சிவவடிவங்களின் வரிசையில் தம்பலகாமம் ஆதி கோண நாயகரின் வடிவம் குறிப்பிடத்தக்கதொன்று. இச்சிவ வடிவம் ஏனைய சிவவடிவங்களைவிட முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இராவணனால் அசைக்கப்பட்ட மலையை நிலைநிறுத்தும் மூர்த்தியாக சிவன் சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆதி கோண நாயகர் என்ற பெயர் இம்மூர்த்தியின் புராதன நிலையைச் சுட்டுகின்றது. இவ்வடிவத்திற்கென மரபுவழித் தெய்வீக வரலாறு ஒன்றும் உள்ளது. தாயின் பொருட்டு வடகைலையில் பெற்றெடுத்த இலிங்கம் மகாவிஷ்ணுவினால் கோகர்ணத்தில் தாபிக்கப்பட்டதும் இராவணன் தக்ஷிண கைலாசமாகிய திருகோணமலை வந்து இறைவன் அருள் வேண்டியவிடத்தும் கிட்டாது போகவே வெகுண்டெழுந்து, தனது வாளால் மலையின் ஒரு பகுதியினை இடத்தெடுத்து இடம்பெயர்க்க முற்பட்டான். அக்கணம் சிவகணங்கள் நடுங்கின. மாதுமையாள் பயந்தனள். சிவன் இடது காலை ஊன்றி மலையை நிலைநிறுத்தி, தேவியை இடது கரத்தால் அணைத்தார். இந்நிலையையே ஆதி கோணநாயகரின் வடிவம் சித்திரிக்கின்றது. மூர்த்தியின் இடது கால் ஊன்றிய நிலையிலும் வலது கால் தூக்கிய படியும் உள்ளன. இரு கரங்களே காணப்படுகின்றன. வலது கரம் கடக அமைதியில் விளங்க இடது கரம் தண்ட ஹஸ்தமாக சமாந்தரமாக உயர்ந்து தேவியை அணைக்கும் அமைப்பில் உள்ளது. சிவனுக்கு இடதுபுறம் தேவியின் வடிவமுள்ளது. கோயிலில் இருக்கும் பழைய கோணேசர் பதின்மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்படுகின்றது.

திருக்கேதீச்சரத்தில் 1894 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களுள் சோமாஸ்கந்தர் இடம்பெற்றுள்ளது. இவ்வடிவத்தில் நாம் சில முக்கியமான அம்சங்களை அவதானிக்கலாம். மூர்த்திகள் ஒரே பீடத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உமையவள் இடது கரத்தைப் பீடத்தில் ஊன்றிய கோலத்தில் காணப்படுவது பிறிதோர் சிறப்பம்சமாகும். ஆகமங்களும் இந்நிலையைக் குறிப்பிடுவன. பல்லவர் காலத்துக்குரிய சோமாஸ்கந்த வடிவங்களில் இடம்பெறும் தேவியின் இடதுகரம் இவ்வாறு அமைந்து விளங்குவது இங்கு ஒப்பிடற்பாலது. பழைய ஆலயப்பிரதிஷ்டா இலிங்கம் ஒன்றும் கிடைத்துள்ளது. ஆலயச் சூழலில் பூமிக்கடியிலிருந்து எடுக்கப்பட்ட பழைய மகாலிங்கமும் குறிப்பிடத்தக்கது. மகாலிங்கம் மேற்குப் பிரகாரத்தில் நிறுவப்பட்டுள்ளது. மகாலிங்கத்தின் இலிங்க அமைப்பு சிறப்பாகவுள்ளது. ஆவுடையார் வட்டவடிவில் உள்ளது. உருவத்திற் சற்றுப் பெரிதாகக் காணப்படுறது இவ்விலிங்கம். 1903 இல் நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின்போது மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் காசியிலிருந்து பெறப்பட்டதாக அறியமுடிகின்றது.



முன்னேஸ்வர ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் இலிங்கத்துடன் அம்பாளின் விக்கிரகமும் இடம்பெறும் மரபும் உள்ளது. வடிவழகி என்ற பெயருக்கேற்ற வனப்புடனும் கலையம்சங்களுடனும் விளங்கும் தேவியின் தாமிர விக்கிரகம் தொன்மையானதாகும். தேவியின் விக்கிரகம் சிவலிங்கத்தின் முன்பாக இடப்புறத்திலே அமைந்துள்ள கல்லினாலான பீடமொன்றில் நிற்கும் கோலத்திற் காணப்படுகின்றது. இவ்வடிவத்திற்குக் கீழே மேருயந்திரம் இடம்பெறுகின்றது கல்லினாலான சிவலிங்கத்துடன் உலோகத்தினாலான அம்பாளின் வடிவம் சேர்ந்து விளங்கும் ஒரு புதிய நிலையினை இங்கு காணமுடிகின்றது. தொன்மை வாய்ந்த ஒரு சிவாலயத்திற்குரிய ஐதிகங்களுள் இலிங்கத்துடன் அம்பாளின் வடிவம் இணைந்திருக்கும். இந்நிலை குறிப்பிடத்தக்கதொன்று.

இந்தியாவில் சுயம்புலிங்கத் தலங்கள் பிரசித்தமடைந்து காணப்படுவதைப்போன்று ஈழத்திலும் தான்தோன்றியீசுவரங்கள் சிறப்புப் பெறுகின்றன. அவற்றுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீசுவரர் கோயில், ஒட்டுசுட்டான் தான்தோன்றியீசுவரர் கோயில் வன்னேரிக்குளம் தான்தோன்றியீசுவரர் போன்ற சிவாலயங்கள் தொன்மையான மரபுடன் பிரசித்தமடைந்தவை. இத்தலங்களுக்கேயுரிய மரபுவழி ஐதிகங்கள் குறிப்பிடற்பாலன. துணுக்காய் வவனிக்குளத்திலும் புராதன சிவாலயம் காணப்பட்டமைக்குரிய அழிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு சிவலிங்கத்தின் சிதைந்த பகுதிகள் காணப்படுகின்றன. இச்சிவலிங்கத்தின் ஆவுடையார் சதுரவடிவிற் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசம் 'கோவில்காடு' என அழைக்கப்படுகின்றது. வன்னிப்பிரதேசத்தில் உள்ள இப்புராதன ஆலயம் பிறநாட்டாரின் அறிவுக்கு உட்பட்டுள்ளவிடத்தும் சிதைந்த இலிங்கத்தின் அமைப்பு மிகவும் நுட்பமாக அமைந்துள்ளதாக ஆறுமுகம் கருதுவர்.

ஈழத்துச் சிவாலயங்களில் கர்ப்பக்கிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது சிவலிங்கமே. பொலன்னறுவை சிவாலயங்களில் கர்ப்பக்கிருகத்தில் இடம்பெறும் இலிங்கங்களின் ஆவுடையார் சதுரநிலையிற் காணப்படுகின்றது. ஆவுடையாரையும் இலிங்கத்தையும் இணைக்கும் பகுதி எட்டுப் பட்டைகளுடன் உள்ளது. இரண்டாம் சிவதேவாலயமாகிய வானவன் மாதேவீச்சரத்தில் உள்ள இலிங்கத்தினது ஆவுடையார் சதுரவடிவில் உள்ளது. முதலாம் சிவதேவாலயத்தில் உள்ள இலிங்கமும் சற்றுச் சிதைந்த நிலையிற் காணப்படினும் இதே வடிவமைப்பைக் கொண்டதேயாகும். பொலன்னறுவையில் சிவாலயங்கள் காணப்பட்ட பிரதேசத்தில் வட்டவடிவமான ஆவுடையாருடன் கூடிய இலிங்கமும் சிதைவுற்ற நிலையிற் காணப்படுகின்றது. சோழர் காலத்தில் சிவாலயத்திற் காணப்பட்ட இலிங்கம் சற்சதுர ஆவுடையாருடன் விளங்குவதை அவதானிக்கமுடிகின்றது. ஈழத்திலுள்ள ஏனைய சிவாலயங்களில் இடம்பெறும் இலிங்கங்களிலுள்ள ஆவுடையார் பெரும்பாலும் வட்டவடிவமாகவே காணப்படுகின்றன.



தேசிய நூலகப் பிரிவு

ஈழத்துச் சிவாலயங்கள் வரிசையில் பிற்காலத்தில் நீவடங்கிலும் மேலும் பல சிவாலயங்கள் இடம்பெறலாயின. நல்லூர் ஸ்ரீ கைலாச நாதஸ்வாமி ஆலயம் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டு 1916 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகும்.

ஈழத்திலுள்ள பிரதான சிவாலயங்களில் இடம்பெறும் சிவவடிவங்களில் பின்வரும் வடிவங்களே வழிபாட்டிற்காக நிறுவப்பட்டுள்ளன. அவையாவன:

1) லிங்கம் (கர்ப்பக்கிருகத்தில்)
2) இலிங்கோற்பவர்
3) சந்திரசேகரர்
4) ஆலிங்கன சந்திரசேகரர் (பிரதோசமூர்த்தி)
5) சோமாஸ்கந்தர்
6) நடராசர் (நிருத்தமூர்த்தி)
7) பைரவர்
8) வீரபத்திரர்
9) தக்ஷிணாமூர்த்தி
10) பிக்ஷாடனமூர்த்தி

இலிங்கோற்பவ மூர்த்தம் சிவாலயத்தின் கருவறையின் மேற்குப் புறத்திலுள்ள மாடத்தில் இடம்பெறுவதாகும். தென்னிந்திய வடிவங்களையொத்த வடிவங்களே இங்கும் காணப்படுவன.

ஈழத்துச் சிவாலயங்களில் உமயாசஹித சந்திரசேகர வடிவம் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. அனேகமாக எல்லாச் சிவாலயங்களிலும் இவ்வடிவத்தைக் காணலாம். ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தியாகிய பிரதோசமூர்த்தமும் இவ்வாலயங்களில் இடம்பெறுவன. இவ்வடிவங்களில் சிவனும் உமையும் பெரும்பாலும் தனித்தனி பீடங்களிலேயே நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் உள்ள சிவாலயங்களில் நாம் காணும் முக்கிய வடிவங்களுள் சோமாஸ்கந்த வடிவம் சிறப்பாகவுள்ளது. சிவனுக்கு இரு சக்திகள் இடமும் வலமும் இடம்பெறுவதைக் காணலாம். இடதுபுறத்தில் விளங்கும் சக்திக்கும் சிவனுக்குமிடையே ஸ்கந்தன் விளங்குவான். சிவனுக்கு வலப்புறத்தில் வீரசக்தி விளங்குவதைக் காணலாம். தேர்த்திருவிழாக் காலங்களில் இம்மூர்த்தி திருவிழாக் கொள்வது மரபாகும்.

ஈழத்துச் சிவாலயங்களில் பைரவரின் விக்கிரகங்களும் இடம்பெறுகின்றன. இலங்கையில் உள்ள சிவாலயங்களில் இடம்பெறும் தட்சணா



மூர்த்தி வடிவங்களில் பல எழில்வாய்ந்தவை. புலோலி பசுபதீசுவரர் கோயிலில் உள்ள தட்சணாமூர்த்தி வடிவத்தில் பல நுட்பமான சிற்ப வேலைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

சிவனது வடிவங்களில் பிக்ஷாடன வடிவமும் ஈழத்துச் சிவாலயங்களில் காணப்படுகின்றன. இவ்வடிவங்களில் பெரும்பாலானவை உலோகத்தினாலானவை. முன்னேஸ்வர ஆலயத்தில் உள்ள வடிவம் சிறப்பு எழில் மிக்கது.

ஈழத்துச் சிவவடிவங்கள் பற்றிய ஆய்வில் கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயிலுக்குச் சிறப்பிடம் உண்டு. தென்னிந்தியக் கோயில் கட்டும் மரபைப் பின்பற்றி கலையுணர்வுடன் ஆகம விதிகளுக்கேற்பக் கருங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட கோயில் என்ற சிறப்பு இதற்குண்டு. ஆனந்தகுமாரசுவாமியின் குறிப்பொன்று கோயில் நிர்மாணத்திற்குத் தென்னிந்தியாவிலிருந்து சிற்பிகள் வந்தனரென்றும், கிட்டத்தட்ட 100 சிற்பிகள் வரை இக்கோயில் நிர்மாணவேலைகளில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கின்றது. இங்கு பயன்படுத்தப்பட்ட சிற்பசாஸ்திர நூல்களுள் விஸ்வகர்மீயம், காசியபம், மயமதம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. வைத்தியலிங்கம் செட்டியார் என்பவரினால் (1790) நிர்மாணிக்கப்பட்ட வண்ணை வைத்தீசுவரன் கோயில் தென்னகத்துச் சிவத்தல அமைப்பைக் கொண்டது. ஆகமமுறைப்படி அமையும் பெருஞ் சிறப்பையும் கொண்டுள்ள இச்சிவாலயம் ஈழத்துச் சிவாலய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றது. இங்குள்ள சிவவடிவங்கள் சிற்ப நுட்பங்கள் செறிந்து விளங்குகின்றன. சிவாலயங்களின் கோபுரங்களும் விமானங்களும் சிவனது பல்வேறு வடிவங்கள் சித்திரிக்கப்படுவதற்கு நிலைக்களனாக விளங்கியுள்ளன.

சிவனது வடிவங்களைச் சிற்பங்களாகச் சித்திரிக்கும் மரபைவிட ஈழத்துச் சிவாலயங்கள் ஒரு சிலவற்றில் சிவனது திருவிளையாடல்கள் உற்சவங்களாக நிகழ்த்தப்படுகின்றன. யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் நிகழும் யமசங்காரம் இவ்வகையில் குறிப்பிடக்கூடியதொரு உற்சவமாகும். இக்கோயில் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்த பின் முதன்முதலாக இடம்பெற்ற வருடாந்த மகோற்சவ விழாவில் தெய்வீக நாடகபாணியில் சிவனது அட்ட வீரட்ட செயல்கள் உற்சவங்களாக நிகழ்த்தப்பட்டதாக அறியமுடிகின்றது.

இன்றைய நிலையில் இச்சிவாலயத்தில் இவ்விழாக்கள் அத்தனையும் இடம் பெறாத விடத்தும் அம்மரபின் தொடர்ச்சியாக காலசம்ஹார உற்சவம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது, ஐப்பசி மாத இறுதிச் சுக்கிரவாரத்தன்று யமசங்கார உற்சவம் நடத்தப்படுகின்றது.

சிவாலயங்ககள் குறித்து நிற்கும் மரபு பற்றி அறிவதற்கு ஈழத்துச் சிவவடிவங்கள் பெரிதும் துணைநிற்பன. சிவாகமங்களின் முக்கியத்துவம் ஈழத்தில் எவ்வகையில் உணரப்பட்டதென்பதை பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியோடு தொடர்புடைய நாவலரின் பணியோடு தொடர்புபடுத்தி அறிவதும் இங்கு அவசியமாகின்றது. ஈழத்துச் சைவ வரலாற்றில் இக்காலப்பகுதி முக்கியத்துவமுடையது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறசமயத்தவர்களால் சைவத்தின் வளர்ச்சி தடைப்படுத்துவதற்குரிய சூழ்நிலை உருவாகியது. சமய, கலா சாரத்துறைகளிலே வேத சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்ட வைதிக சைவத்தின் தனித்துவத்தைப் பேண விழைந்ததோடு மாத்திரமன்றி, சைவசமயக்கோட்பாடுகளை மீண்டும் நிலைநிறுத்துவதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு முன்னின்று உழைத்தவர் நல்லூர் ஆறுமுகநாவலர் ஆவர். தேவாரப் புகழ்பெற்ற திருக்கோணேசுவரம், திருக்கேதீசுவரம் போன்ற தொன்மை வாய்ந்த சிவாலயங்களையும் கீரிமலையிலுள்ள சிவன் கோயிலையும் புனருத்தாரணம் செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறி சைவ மக்களை அத்துறையில் உற்சாகப் படுத்தியதிலிருந்து நாவலர் சிவாலய மரபைத் தொடர்ந்து பேணுவதில் காட்டிய அக்கறை தெளிவாகின்றது.

ஈழத்துச் சிவாலயங்களில் சிற்பவியல் சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்குத் தென்னிந்திய சிற்பிகளே காலத்துக்குக் காலம் வரவழைக்கப்பட்டனர். உள்ளூர்ச்சிற்பிகளும் இவர்களோடு இணைந்து செயலாற்றினர். சிவாலய சேவைகளில் ஈடுபட்ட சிவாசாரியர்களும் சிற்பத்தொழிநுட்பம் பற்றித்தெரிந்தவர்களாக விளங்கினர்.

இவ்வாறாக, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஈழத்தில் சிவவழிபாடும், சிவாலய மரபும் தொடர்ச்சியாக வளர்ச்சிபெற்று வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவ்வளர்ச்சியின் மத்தியில் ஈழத்துச் சிவ வடிவங்களும் முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளன. இச்சிவவடிவங்களை உருவாக்கும் கலைமரபும் கூடவே வளர்ச்சி பெற்றது எனக் கூறலாம். தென்னிந்தியாவில் உருவாகிய சிவாலயப் பண்பாட்டுக்கு எங்ஙனம் ஆகமங்கள் அடிப்படையாக விளங்கினவோ அதே போன்று ஈழத்திலும் அவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. சிவாலய அமைப்பு, விக்கிரக அமைப்பு, அவற்றுக்குரிய கிரியை மரபு. ஆகிய



இன்னோரன்ன விஷயங்களுக்குச் சிவாகமங்களை ஈழநாட்டிலும் அடிப்படை ஆதாரங்களாக விளங்கியுள்ளன. சிற்பசாஸ்திர நூல்களும் இவ்விஷயத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இலங்கையிற் கிடைத்துள்ள பழைய உலோக வடிவங்கள் தென்னிந்தியச் சிற்ப மரபைக் கொண்டு விளங்குகின்றன. சில தனித்துவமான பண்புகள் இச்சிற்பங்களில் காணப்படுமிடத்தும் சிவ வடிவங்களை உருவாக்கும் மரபு வேறானது என்ற முடிபுக்கு நாம் வரமுடியாதுள்ளது. ஈழத்திலுள்ள சிவாலயங்களில் இடம்பெற்ற சிவவடிவங்களின் சிற்ப மரபு ஆகமங்களும் சிற்பசாஸ்திர நூல்களும் கூறும் விதிமுறைகளுடன் பெருமளவில் உடன்படுவன என்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். இத்தகைய சிற்பங்கள் ஈழத்துச் சிவவழிபாட்டின் பெருமையைக் காலந்தோறும் எடுத்தியம்பிக்கொண்டிருக்கின்றன.

சிவாலயங்களில் நிகழும் நித்திய கிரியைகள், பழுதடைந்த காலங்களில் திருப்பணிகள் செய்தபின் நிகழும் கும்பாபிஷேகங்கள், தொடர்ந்து நிகழும் மகோற்சவங்கள், அபிஷேகங்கள், இலட்சார்ச்சனை போன்றவை சிவவழிபாட்டின் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன. இத்தகைய சிறப்பு நாட்களில் அடியவர்கள் விரதமநுட்டித்து சிவவழிபாட்டில் மிகவும், ஆழமாக ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. மகாசிவராத்திரி திருக்கேதீச்சரத்தில் பக்தி சிரத்தையுடன் அநுட்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தொன்மைக் காலம் முதல் இற்றை வரை சிவவழிபாடு ஈழத்து மண்ணில் எழுந்துள்ள சிவாலயங்களில் முறையாக நிகழ்ந்து வருகின்றது பெருமைக்குரிய விடயமாகும். □



4

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்

— குறள்

உ
சிவமயம்



வலி மேற்கு மாவடிக் கிராம வடலியடைப்பைப்
பிறப்பிடமாகக் கொண்டவரும்
ஆனைக்கோட்டை, கூழாவடியை வதிவிடமாகக்
கொண்டவரும்
ஆறுமுகம் கதிரவேலுவின் கனிஷ்ட புத்திரனும்
ஆனைக்கோட்டை
அருணாசலம் சின்னத்தம்பி தங்கமுத்து
தம்பதிகளின் மருமகனும்
திருமதி செல்லம்மாவின் அன்புக் கணவரும்
ஆனைப்பந்தி கூட்டுறவுச்சாலையின் முன்னாள் மனேச்சருமாகிய

*அமரர்*

## கணபதிப்பிள்ளை அவர்களின்

*சிவபதப் பேறு குறித்த*

# நினைவு வெளியீடு

**26-10-89**

# என் மாமா

1963 —
க. கணபதிப்பிள்ளை என்றவரை
நான் முதன் முதல் கண்ட
வருடம்
வெள்ளை வேட்டி
கல்கிக் கூறு நசனல்
நெத்தியில் பொட்டு
அழகாக இழுத்த முடி
வாயில் நெவிகட்
மைனராக —
மொறிஸ் மைனர் காரிலிருந்து
ஒருவர் இறங்குகின்றார் —
"இவர் தாண்டா கணபதிப்பிள்ளையர்"
என் நண்பன் இரகசியமாகக்
கூறுகின்றான்
மனிதனை — அவன் இயல்பான குணநலன்களை
துருவி ஆராயும், என் சாதாரண வழக்கத்
துடன் — அவரைப் பார்க்கின்றேன் —
சாதாரண மனிதனிடம் காணப்படாத ஒரு
முகாமைத்துவத்தன்மை, மிடுக்கு —
வாழ்க்கை வாழ்வதற்கே என்ற
பாங்கு
மைனராக இருக்க வேண்டும்
என்ற துடிப்பு
ஒரு கணத்தில் இந்த மைனரைப்
பற்றிய என் கணக்கெடுப்பு —
பின்னர் உறவு வளர்ந்து
பிதாவாக, மாமாவாக, நண்பனாக
அன்பனாக, பழகும் உறவு நெருக்கமடைந்தது —
உறவு முற்றினாலும் —
ஒருவருக்கொருவர் மரியாதை —
மூத்த மருமகனை — மூத்தமகனாகப்
பாவித்த பாங்கு — என்னால் மறக்கமுடியாதது —
கணபதியார் — பகிடி மன்னன் —
மற்றையோர் சொல்வதற்கு
பகிடியாக, அதேநேரம் ஆணித்தரமாக
அவர்கள் யோசிக்கக்கூடியதாகச்
சுடச்சுட பதில் சொல்லும் ஆற்றல்



எல்லோருக்கும் கிட்டாது — இது
என்மாமாவிற்கு கைவந்த கலை —
ஒவ்வொருவரின் குணம்சங்களை கவனித்து
அதை விபரிக்கக்கூடிய விதத்தில்
பட்டம் சொல்லி அழைப்பதில் இவர் வல்லுனர் —
என் மனைவி சிறுமுன் கோபக்காறி
தகப்பன் வைத்த பட்டம் கொச்சிக்காய்வெடி
டப்டப் என்று வெடிக்கும் —
ஆனால் ஆபத்தில்லாதது —
மனேச்சர் கணபதிப்பிள்ளை
அவரை அறிந்தோர்,
அன்புடன் அழைப்பது —
அவர் மனேச்சர் தான் —
வீட்டில் —
சுற்றத்தார் மத்தியில்
நான் வாழ்ந்த சூழலில் —
அவர் வட்டத்துள்
என்றும் மனேச்சராக
வாழ்ந்தார் —
ஒரு நாள் —
அவரின் மனைவிக்கு வருத்தம். —
பலர் வந்து பார்த்துச் சென்றனர் —
புதிதாக வந்த எனக்கு யாரையும்
சரியாகத் தெரியவில்லை —
ஒரு ஆள் —
நல்ல உயரம்
தடித்த மீசை —
நல்ல உடம்பு —
பார்ப்போரை, மறுமுறைபார்க்க
வைக்கும் தன்மை — என்மனதில் பட்டது —
இவர் என் அருகில் வந்து
தம்பி இது தான் 'ஒறிஜினல்முத்திரை'
என்றார் — அப்போது எனக்கு விளங்கவில்லை
பின்னர் விளங்கியது — அவர்


என்மாமியின் கூடப்பிறந்த தமையன்
என — என்ன விளக்கம் —
சின்னத்தம்பிப்பரியாரியார் —
ஆனைக்கோட்டையில்
பேர்பெற்ற வைத்தியர்
அவரின்
கடைசிமகள் செல்லம்மா —
வாலிபன் கணபதியாருக்கு
ஒரு கண் —
கணபதி — செல்லம்மா
இனிய குடும்பஸ்தராகினர் —
சாதாரணபடிப்பு —
சாதாரண வருமானம் —
சிறந்த வாழ்க்கை —
விருந்தோம்பலுக்கு
கூழாவடியில் கணபதியாரும் செல்லம்மாவுந்தான்
குமர் கரை சேர
வீடு குடிபுக —
நல்ல காரியம் தொடக்க —
புக்கைதிண்ணிப்பிள்ளையார் கோவில் விழா
எதற்கும் இக்குடும்பம் முன்னுக்கு —
கணவனும்
மனைவியும்
ஒருவரில் ஒருவர்
பேய்க்காதல் —
கோபம் வந்து ஏசினாலும்
ஒருவர் மற்றவருக்குக்
காட்டாமல் உள்க்குமுறல் —
நான் கண்ட
நல்லதொரு குடும்பம் —
உற்பத்தியும் சிறிது கூடத்தான்
எல்லாமாகப் பத்து —
பத்தும் — நல்முத்துக்கள் —
இவர்களை நன்னெறிப்படுத்தி
வேண்டிய வசதிகள் கொடுத்து
வளர்த்து —
முத்துக்களை ஒவ்வொருவரும் எடுக்க —
நன்கு முடிந்தது கல்யாணங்கள் ...
அந்த நல்லமனம் —
நற் பரிசில்களைப் பெற்றதில் வியப்பில்லை —



அவர் இழப்பு —
என்னை ஆட்டியுள்ளது
அன்பனாக,
நண்பனாக,
மாமாவாக,
பிதாவாக,
உறவாடி,
நான்
நேசித்த ஒரு நல்ல
உயிரினை பிரிந்தது
அதற்கு இறுதிக்கடன் செய்தது —
உண்மையில் என்னை
நிலைதளம்பச் செய்துள்ளது ...
வெளியில் சொல்ல
முடியாத — ஊமை
உமைச்சலுடன்
திரிகின்றேன் ...
ஆம் அந்த இழப்பு
எனக்குப் பெரிது —

134589
நூலக
யாழ்ப்பாணம்

சு. டிவகலாலா
மருமகன்



# தேற்றம்

இன்பம் நிறைந்த இவ் வையகத்தே
இனிதே வாழ்ந்த ஒளி விளக்கே
இருபத்தொரு வயதினிலே
இல்வாழ்வமைத்த இளம்பிறையே
பெண்ணெட்டு ஆணிரண்டாய்
பெற்றெடுத்தீர் பத்தினைநீர்
குறையிலாது அனைவரையும்
நிறைவுடனே வளர்த்ததென்னே,
அன்புள்ள தந்தையாக
அன்னைக்கொருதெய்வமாக
இறைவனுக் கோர் பக்தனாக
இல்லறத்தில் திளைத்திருந்தீர்
செல்வச் செழிப்புடனே
செல்லம்மாள் துணையுடனே
பெற்ற மக்கள் அருகினிலே
பெருமையுடன் வாழ்ந்ததென்னே,
அன்பு மிக்க தந்தை உமை
அரவணைத்துப் பேசிடவே
அன்பு மகன் பறந்து வந்தான்
அதனிடை நீர் போனதெங்கே
இன்று எமை மறந்து விட்டு
இன்னலிலே ஆழ்த்திவிட்டு
அனைவருக்கும் விடைகொடுத்து
அணுகி விட்டீர் இறைவனைநீர்
துன்பமது உமக்கில்லை
துயரினை நீர் காணவில்லை
எம்மையெல்லாம் துயரினிலே
ஏங்க வைத்த நியாயமென்ன,
எம்மை விட்டுப் போனாலும்
எங்களது சிந்தைகளில்
உங்களது ஞாபகங்கள்
உறங்காது விழித்திருக்கும்
மீண்டும் இவ் வையகத்தே
மானிடனாய்ப் பிறக்க நேர்ந்தால்
எம்மில்ல ஒளிவிளக்காய்
எழுந்தருள வேண்டுகிறோம்.

அன்பு மனைவி பிள்ளைகள்



# பஞ்சபுராணம்

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

## திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியேமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

134589

## திருப்புராணம்

என்று மின்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

கள்

## அருணாசலம்—சின்னத்தம்பி—தங்கமுத்து தம்பதிகள்

கணபதிப்பிள்ளை + செல்லம்மா

இராசம்மா | அருணாசலம் | செல்லம்மா

உமாமதிமலர் + (கனடா) பிரேம்மோகன் (கனடா)
ஜனகன் (கனடா)


கோகிலராஜி + (கனடா) ரவீந்திரன் (கனடா)
அகிலன் (கனடா)

சூரியகுமாரி + (பிரான்ஸ்) வன்னிநாதன் (பாரிஸ்)

மகேஸ்வரநாதன் (கனடா)

மேகலா (இராமநாதன் கல்லூரி)

## ஆறுமுகம் — கதிரவேலு — நாகமுத்து தம்பதிக



## நன்றி

எமது குடும்பத்தலைவர் அமரர்
க. கணபதிப்பிள்ளை அவர்களின்
மரணவீட்டில் பங்குபற்றியும்,
செய்திகள் அனுப்பியும் எமது
துயரில் பங்கு கொண்ட,
ஊரூர், உறவினர் நண்பர்கள்,
அன்பர்கள் அத்தனைபேருக்கும்
உதவிகள் புரிந்தோருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள் —
இந்த நினைவு மலரினைச் சிறப்புற
அமைத்துத்தந்த செட்டியார் அச்சக
உரிமையாளர் ஊழியர்களுக்கும்,
கட்டுரை தந்துதவிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
அவர்களுக்கும் எங்கள் நன்றிக்குரியவர்களே —

ஆனைக்கோட்டை
2( - 11 - 1989

மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

21
சே